# இயேசுவின் சமாதானம்

உடைந்த உள்ளங்களுக்கு

வருடம் 15

மாதம் 10



PEACE OF JESUS PRAYING FOR THE GLOBAL PEACE

## இயேசு உங்களை உயர்த்துவார்

ASV ROBIN

Peace of Jesus.org India

ஏப்ரல் 2017



# இயேசு உங்களை உயர்த்துவார்

- ஏ.எஸ்.வி. ராபின்

கர்த்தருக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக்கோபு 4: 10).

நம் வேலை தொழில், வியாபாரம், ஊழியம் இவை எல்லாவற்றிலும் நம்மை கர்த்தர் இயேசு உயர்த்தி ஆசீர்வதிக்க வல்லவர். இதற்காக தேவனுக்கு முன்பாக முதலாவது நம்மை தாழ்த்த வேண்டும்.

## தாழ்மை தரும் உயர்வு

அவர் (இயேசு) மனுஷரூபமாய் காணப்பட்டு மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலிப்பியர் 2:8). உலகமும் சகலமும் படைத்து அரசாளுகிற தேவன் இந்த பூமியில் இயேசு என்ற பெயரில் மனிதராக பிறந்தார். சிலுவையில் தன் உயிரை விடும்வரை தன்னை தாழ்த்தினார். நம்மை இவ்வுலகிலும் உயர்வாய் வாழ வைத்து, முடிவில் பரலோகத்தில் (சொர்க்கத்தில்) அவரோடு உயர்ந்த நிலையில் வாழ வைப்பதற்காக தாழ்த்தினார்.

முதலாவது நாம் தேவ சமூகத்தில் நம்மை தாழ்த்தி இயேசுவே என் கடவுளே எனக்கு எல்லாமும் நீர் தான். நான் உம்முடைய பிள்ளை. என்னையும், என் குடும்பத்தையும் என் வாழ்வையும் முழுமையாய் உம்மிடம் அர்ப்பணிக்கிறேன் என்று சொல்லும் போது, நம்மை இயேசு உயர்த்துவார். தாவீது என் இருதயத்திற்கு ஏற்றவன் என்று கர்த்தரால் சொல்லப்பட்ட தாவீது என்ற அரசன் தன்னை எல்லா நிலைமையிலும் தாழ்த்தினார். இதுவே தேவன் இப்படி அவரை புகழ காரணமாய் இருந்தது. தாவீது ஆடு மேய்த்துக் கொண்டிருந்த வாலிப காலத்திலும், ராஜாவான பின்பும் தன்னை தாழ்த்தினார். ஆகவே எந்த ஒரு எதிரி நாட்டு ராஜாவும் யுத்தத்தில் அவரை ஜெயிக்க முடியவில்லை இதற்கு காரணம் தேவனை அவர் மகிமைப்படுத்தி நன்றியோடு துதித்து அவருக்கு கீழ்படிந்து வாழ்ந்து வந்தார். தேவன் அவரோடு இருந்து வெற்றிமேல் வெற்றி கொடுத்து உயர்த்தினார்.

## மனிதருக்கு முன்பாக தாழ்மை

நாம் யாரையும் அற்பமாய் எண்ணாமல் அவர்களை மதித்து நடத்த வேண்டும். கர்த்தர் இயேசுவின் பார்வையில் எல்லோரும் விலையேறப் பெற்றவர்கள். மனத்தாழ்மையினாலே ஒருவரை ஒருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ண வேண்டும். (பிலிப்பியர் 2:3). இவ்வுலகில் அவர்கள் எந்த ஒரு எளிய நிலையில் உள்ளவராக இருந்தாலும் நம்மை விட படிப்பில், அழகில், வசதியில், ஞானத்தில் குறைவுள்ளவராய் இருந்தாலும் ஜாதி, மத, இன, மொழி பேதமின்றி அவர்களை நேசித்து உயர்வாய் நடத்த வேண்டும். இந்த தாழ்மை நம் உன்னதத்திலிருந்தே புறப்பட்டு வரவேண்டும் இதுவே மனத்தாழ்மை என்று இந்த வசனம் கூறுகிறது.

## ஏழைகளுக்கு கொடுங்கள்

தரித்திரருக்கு கொடுப்பவன் தாழ்ச்சியடையான், தன் கண்களை ஏழைக்கு விலக்குகிறவனுக்கு அநேக சாபங்கள் வரும் (நீதிமொழிகள் 28:27). நம் உள்ளத்தில் அன்பிருந்தால் பிறருக்கு நம்மால் இயன்ற உதவிகள் செய்யாமல் இருக்க முடியாது. நம் வாயினால் வழி காட்டும் உதவி, சிபாரிசு செய்யும் உதவி, உணவு, உடை, பணம் பொருள் கொடுத்து உதவி செய்யலாம். மனிதர்களை நேசிக்காமல் அவர்களுக்கு உதவி செய்யாமல் கடவுளே, இயேசுவே, உம்மை நேசிக்கிறேன் என்று நாம் கூறி ஜெபிப்பதை தேவன் ஏற்றுக் கொள்ள மாட்டார். தான் கண்ட சகோதரிடத்தில் அன்பு கூறாமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான் (1யோவான் 4:20) என்று இயேசு கேட்கிறார். ஏழைக்கும் திக்கற்றோருக்கும் உதவும் போது நம் அநேக பாவங்களும் சாபங்களும் தேவனால் மன்னிக்கப்படுகின்றன.

கர்ததர் இயேசுவின் வார்த்தையின்படி நாம் வாழும் போது இவ்வுலகிலும் முடிவில் பரலோகத்திலும் தேவன் நம்மை உயர்வாய் வாழ வைப்பார். தேவனுக்கே மகிமை!







பெண்கள் பகுதி

# மலர்களே!

-பொற்செல்வி ராபின்

**பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருக்கே மகிமை!**

என் பாசத்திற்குரிய சகோதரியே, இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் ஆசீர்வதிப்பாராக!

## வசந்த காலம்

இதோ மாரிகாலம் சென்றது. மழை பெய்து ஒழிந்தது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது என்று உன்னதப்பாட்டு 2:11,12ம் வசனம் கூறுகிறது. மழைக்காலம், இலையுதிர் காலம் முடிந்த பின்பு மலர்கள் பூத்துக் குலுங்கும் வசந்த காலம் வருகிறது. செடிகளும், மரங்களும் அழகு வண்ண மலர்களால் நிரம்பி மனிதர்களை மகிழ்ச்சியாக்குகின்றன. மலர்களின் இன்பமான வாசனை மனித உள்ளங்களை பரவசமூட்டுகின்றன.

## வாழ்வில் வசந்தம்

நாம் தேவன் இயேசுவின் பார்வையில் விலையேறப்பெற்றவர்கள். பாடுகள் மத்தியில், நம்பிக்கை இழந்த நிலையில் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் வாழ்விலும் வசந்தம் உண்டாகும். பிரச்சனைகளையும், பாடுகளையும் போக்கி உங்களையும் உங்கள் வாழ்வையும் தேவன் மலரச் செய்து மணம் வீசச் செய்வார். வியாதியா? தோல்வியா? தொழில், வியாபாரத்தில் நஷ்டமா, நம்பிக்கை துரோகமா? ஏமாற்றமா? கடன் பிரச்சனையா ? குழந்தை இல்லாததால் வருத்தமா? அவமானமா? பிள்ளைகளின் திருமணத் தடையா? இயேசு உங்களை கைவிடவே மாட்டார். நிச்சயம் இதில் அற்புதம் செய்து உங்களையும் குடும்பத்தாரையும் மகிழப் பண்ணுவார். உபவாசித்து கண்ணீரோடு ஜெபம் செய்யுங்கள்.

## வசந்தத்தில் கனிகள்

சுவை மிகுந்த, வண்ணமிகு கனிகளைத் தந்து நம்மை மகிழ்விக்கும் தேவன், நம்மிடம் கனியை எதிர்ப்பார்க்கிறார். அன்பினால் நிறைந்து நல்ல செயல்களைச் செய்து, நாம் அவருக்கு கனி கொடுக்க வேண்டும் என்று இறைவன் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிறார். ஆவியின் கனி என்று அழைக்கப்படும் இது, 9 குணங்களைக் கொண்டது. இவை அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொருமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா 5:22,23) எதிர்மாறான சூழ்நிலையிலும் குடும்பத்திலும், குடும்பத்திற்கு வெளியேயும் நாம் இந்த கனியை வெளிப்படுத்த வேண்டும். கனியில்லாமல் நாம் பரலோகம் செல்ல முடியாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே (நரகத் தீயில்) போடப்படும் என்று லூக்கா 3:9ல் தேவன் இயேசு நம்மை எச்சரிக்கிறார். நாம் மலர்ந்து நற்கனி கொடுத்து வாழ்வோம்.

## மகிழ்ச்சியாக்கிய தேவன் இயேசு




பொன்மணி குணசேகரன்
கோவை.

அன்பு சகோதரிக்கு

கோவை இயேசு அழைக்கிறார் பெண்கள் கூட்டத்தில் நீங்கள் தேவசெய்தி கொடுத்த போது நிம்மதி இழந்த நிலையில் கலந்து கொண்டேன். தேவசெய்தி கொடுத்தபின்பு தனி ஜெப நேரத்தில்,என் அலுவலகத்தில் என் மேஜையில் இருந்த முக்கியமான ஃபைல் காணாமல் போனதை கூறினேன். அந்த ஃபைல் கிடைக்காவிட்டால் என் வேலை பறிபோகும் நிலையையைச் சொல்லி எனக்காக ஜெபிக்க சொன்னேன். நீங்கள் ஜெபித்து நீதியின் சூரியன் இயேசு நீங்கள் வெட்கப்பட்டு போக விடமாட்டார். ஃபைல் கிடைக்கும் என்று கூறினீர்கள். அந்த ஃபைல் சில நாட்களில் கிடைத்தது. தேவன் இயேசு எனக்கு செய்த இந்த அற்புதத்திற்காக தேவாதி தேவனை மகிமைப்படுத்துகிறேன்.

அன்புத்
தம்பி,
தங்கையே,
பரிசுத்த தேவன்
இயேசுவின்
பெயரால்
உன்னை அன்புடன்
வாழ்த்துகிறேன்.
தேவாதி
தேவனுக்கே
மகிமை!

பொற்செல்வி ராபின்




## ஜோதிகளின் பிதா

எல்லா நன்மைகளும், வரங்களும், ஜோதிகளின் பிதாவாகிய தேவனிடமிருந்தே இறங்கி வருகிறது. நம்மை உருவாக்கிய சிருஷ்டி கர்த்தரை ஜோதிகளின் பிதா என்று பின்வரும் வசனம் கூறுகிறது. நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17).

## அன்புமிகு தேவன்

தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று 1 யோவான் 4:16 வசனம் கூறுகிறது. அது மட்டுமல்ல அன்பிலே நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார் என்றும் வாசிக்கிறோம். இந்த தேவன், இயேசு என்ற பெயரில் இவ்வுலகிற்கு வந்தார் (1தீமோத்தேயு 3:16). நம் தேவனை அப்பா, அப்பா என்று அழைக்க உரிமை கொடுத்திருக்கிறார். இந்த தேவன் நீ வாழ்வில் தவறுகள் செய்யும்போது, தவறான பாதைக்கு போகும் போது சிறு தண்டனையைக் கொடுத்து உன்னை சீர்படுத்துகிறவராய் இருக்கிறார். இதை பைபிள் சிட்சை என்று கூறுகிறது.

## தேவனிடத்தில் பங்கு

நீ சிறந்த பங்கை, நன்மைகளை, தேவன் இயேசுவிடமிருந்து பெற்று மகிழத்தான் இந்த சிட்சை! நீங்கள் சிட்சையை சகிக்கிறவர்களாக இருந்தால் தேவன் உங்களை புத்திரராக (பிள்ளையாக) எண்ணி நடத்துகிறார். என்று எபிரெயர் 12:7)ம் வசனம் கூறுகிறது. தேவனின் சிட்சையை பெற்று அவருக்கு பயந்து நடக்கும் போது, அவருடைய செல்லப்பிள்ளையாக நீ மாறுகிறாய். அப்பா, அப்பா இயேசப்பா நான் உங்க பிள்ளை. எனக்கு விசேஷித்த உடல்நலத்தை, ஞானத்தை, மனிதர் தயவை கொடுத்து என்னை பிரகாசிக்க வையுங்க என்று பிரார்த்தனை செய். உன் படிப்பு, வேலை, தொழில், வியாபாரத்தில் உயர்வடைந்து மகிழுவாய். அதோடு உன்னை பரிசுத்த பாதையில் நடத்துவார். உன் குடும்பமும் மகிழும். ஆசீர்வதிக்கப்படும்.

## அதிசயம் செய்த தேவன் இயேசு

அன்பு சகோதரருக்கும், சகோதரிக்கும்

எனக்கு திருமணமாகி 22 ஆண்டுகளாக குழந்தை இல்லாததால் மிகவும் கவலையோடு இருந்தேன் இந்த நிலையில் என் கர்ப்பப் பையில் கட்டி இருக்கிறது என்று மருத்துவர்கள் கூறினார்கள். மிகவும் மன வேதனையோடு இதை உங்களிடத்தில் கூறிய போது நீங்கள், இறைவன் இயேசு சீக்கிரத்தில் குழந்தை தருவார் என்று கூறினீர்கள். நீங்கள் கூறிய சில மாதங்களில் நான் கர்ப்பமாகும்படி தேவன் இயேசு இரக்கம் பாராட்டி கட்டியை குணமாக்கி கர்ப்பபையில் குழந்தையை உருவாக்கினார். இது தேவன் இயேசு செய்த அதிசயம் என்று ஏற்கனவே என்னை பரிசோதித்த மருத்துவரே கூறினார். என்னை கண்மணி போல் பத்துமாதங்கள் காத்து அழகிய ஒரு பெண் குழந்தையை பெற்றெடுக்க இறைவன் இயேசு கிருபை பாராட்டினார். என்னை தாயாக்கி மகிழ்வித்த தேவாதி தேவனை நன்றியோடு துதித்து மகிமைப்படுத்துகிறேன்.

**ஜெ. ராணி, கோவை**





உலக மக்களின்
நல்வாழ்வை விரும்பும்

# இயேசுவின் சமாதானம் ஊழியங்கள்
## ஜெபித்துக்கொள்ளுங்கள்

### 18 வகை ஊழியங்கள்


- ✦ திக்கற்றோர், ஊனமுற்றோர், முதியோர் மத்தியில் ஊழியம்
- ✦ உள்தேச, வெளிதேச பிரசங்க ஊழியம்
- ✦ ஏழைகள் மத்தியில் சுவிசேஷம் மற்றும் உதவி
- ✦ ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம்
- ✦ மருத்துவமனை ஊழியம்
- ✦ தொலைக்காட்சி ஊழியம்
- ✦ உபவாச ஜெப ஊழியம்
- ✦ தொலைபேசி ஊழியம்
- ✦ மலைப்பகுதி ஊழியம்
- ✦ பத்திரிக்கை ஊழியம்
- ✦ கைப்பிரதி ஊழியம்
- ✦ புத்தக ஊழியம்
- ✦ கடித ஊழியம்
- ✦ பாடல் ஊழியம்
- ✦ மனநல காப்பக ஊழியம்
- ✦ மிஷனெரி ஊழியம்
- ✦ இலங்கை அகதிகள் மத்தியில் ஊழியம்

விளம்பரம் மூலம் சுவிசேஷ ஊழியம்







தொடர் 108

ஆயத்தப்படுங்கள், ஆயத்தப்படுத்துங்கள்

- பொற்செல்வி ராபின்

# இயேசுவின் இரண்டாம் வருகை

தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான் (யாக்கோபு 4:7)

## வெற்றிக்கு வழி

பாவம் செய்ய, தேவனுக்கு கீழ்ப்படியாத செயல்களை செய்ய, அக்கிரமம் செய்ய தூண்டும் சாத்தானை (பிசாசை) நாம் எதிர்த்து துரத்தி அடிக்க வேண்டும். உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும்,என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது என சங்கீதம் (119:105)ம் வசனம் கூறுகிறது. பைபிள் என்ற சட்ட புத்தகத்தை வாசித்து அந்த வசனங்களின்படி வாழ்ந்தால் நாம் தேவனுடைய வெளிச்சத்தில் நடந்து பாதுகாப்பாய் இருப்போம்.

## பாவக்கட்டு

பாவம் மனிதருடைய சமாதானத்தை கெடுத்து உள்ளத்தை கலக்கம் அடையச் செய்யும். சிலர் பாவத்தின் கோரப் பிடியில் சிக்கி நிம்மதி இழந்து தற்கொலை செய்து கொள்கின்றனர். பாவம் செய்யும் எவனும் பாவத்திற்கு அடிமையாய் இருக்கிறான். (யோவான் 8:34) என்று இறைவன் இயேசு கூறுகிறார். பாவம் செய்பவரை சாத்தான் தனக்கு அடிமையாக்கி விடுகிறான். இப்படிப்பட்டவர்களை விடுவிக்கத்தான் தேவன் இயேசு தனது பரிசுத்த ரத்தத்தை சிந்தி, சாபமான சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். பாவம் கயிறு போல சம்பந்தபட்ட மனிதரின் சிந்தை, உடல், ஆத்துமாவை கட்டிவிடுகிறது. இதுவே பாவக்கட்டு.

## இயேசுவே வழி

பொழுதுபோக்கு சாதனங்கள் தரும் பாவ சிற்றின்பமும் தேவன் விரும்பாத பாவம் தான். கொலை செய்வது மட்டும் பாவம் அல்ல. பிறர் இதயத்தை ஈட்டி போல் குத்தி காயப்படுத்தும் வார்த்தைகளை பேசுவதும்,பிறரை அவமானப்படுத்தி பழி சொல்லி, தற்கொலை செய்ய தூண்டுவதும் கொலை செய்வதற்கு சமம். கொடிய வார்த்தைகளை தாங்க முடியாமல் சிலர் அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விடுகின்றனர். சிலர் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுகின்றனர். கோபத்தை விட்டு விடுங்கள் தகாதவைகளை, தகாத உறவுகளை உதறி விட்டு விடுங்கள். தேவனோடு நெருங்கி உறவாடுங்கள். உங்கள் குடும்பத்தை அன்பால், பரிசுத்தத்தால் கட்டி எழுப்புங்கள். உங்கள் பாவங்களை பிரார்த்தனை செய்து கண்ணீரோடு இறைவன் இயேசுவிடம் உடனேயே சொல்லி பாவமன்னிப்பு பெறுங்கள் பாவமன்னிப்பு பெறாத எவரையும் இறைவன் இயேசு பரலோகத்தில் ஏற்றுக் கொள்வதில்லை. அன்பு தகப்பன் இயேசு இப்பொழுது உங்களை என் மகனே, மகளே என்று அழைக்கிறார். ஆட்டுக்குட்டியானவரின் (இயேசுவின்) ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் (பரலோகம்) பிரவேசிப்பார்கள் (வெளி 21:27) என்று இயேசு கூறியுள்ளார்.

-தொடரும்.

நீங்கள் நன்கொடை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கிகளில் செலுத்தி எங்களுக்கு தெரியபடுத்த அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| ICICI Bank | PEACE OF JESUS MINISTRY & TRUST<br>A.S.V. ROBIN | A/c No. 615201134411<br>A/c. No. 615201500867 |
| IDBI BANK | PEACE OF JESUS MINISTRY | A/c No. 006102000034441 |
| State Bank of India | A.S.V. ROBIN | A/c. No. 31682257041 |
| TMB | A.SOLOMON VICTOR ROBIN | A/c. No. 058100050303244 |
| Indian Overseas Bank | A.S.V. ROBIN | A/c. No. 010601000025999 |
| இண்டியன் பேங்க் Indian Bank | YESUVIN SAMADHANAM<br>A.S.V. ROBIN | A/c No. 725420502<br>A/c. No. 434465781 |





## வேத வினாப் போட்டி

(அனைவரும் கலந்து கொள்ளலாம்) 1பேதுரு 1 - 5

"அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" - வசனம் குறிப்பிடுக

சென்ற மாத சரியான விடை : நியாதிபதிகள் 4 : 9 பரிசு பெற்றவர் ஏ. அன்னத்தாய், ஆல்பர்ட் தூத்துக்குடி



ஆக்னஸ் ஐசக்

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 20.04.2017

## திராட்சை



இதில் வைட்டமின் சி, கே , பி1,2,3,6,12,இரும்பு சத்து, பாஸ்பரஸ், டெக்ஸ்ரோஸ், ப்ரக்டோஸ், சர்க்கரை ஆகியவை உள்ளன. இது ரத்த சோகை, ஜீரண கோளாறு, சிறுநீரக கோளறுகளை போக்கும். இது ரத்தத்தை சுத்தப்படுத்தி இதயம், கல்லீரல், மூளை நரம்புகளை பலப்படுத்தும்.

இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை தருகிறது. இரத்தத்திலுள்ள கொழுப்பை கட்டுப்படுத்துகிறது. இது வாய்ப்புண், வயிற்றுப்புண் ஆற்றக்கூடியது. பித்தத்தை குறைக்கும், எலும்புகளையும், பற்களையும் பலப்படுத்துகிறது. இதன் விதைகள் கேன்சர் நோய்க்கு மருந்தாக பயன்படுகிறது. அழகு சாதனம் தாயாரிக்கப் பயன்படுகிறது. இது மருந்து பொருளாகவும் பயன்படுகிறது.

IMAYAM இமயம் டி.வி.யில்

இயேசுவின் சமாதானம் பரவச நேரம்





காலை 7-15

ஏப்ரல் 11 25 செவ்வாய்

ஒவ்வொரு 1வது 3வது 5வது செவ்வாய்கிழமைகளில்

விரைவில் வெளிவரவிருக்கும்

கர்த்தர் இயேசுவின் கிருபையினால்

PEACE OF JESUS

பொற்செல்வி ராபின் எழுதிய குடும்பத்தை வெளிச்சமாக்கும்

## அருணோதயம்

ஜெபித்துக் கொள்ளுங்கள்

visit our website

*peaceofjesus.org (or) asv robin*

இதன் மூலம் இந்தியா மற்று உலகமெங்கும் இயேசுவின் சமாதானம் ஊழியங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், இயேசுவின் சமாதானம் பத்திரிக்கையை (E-magazine) வாசிக்கவும், ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் கொடுத்த வீடியோ செய்திகளைப் பார்க்கவும் தேவன் இயேசு கிருபை செய்திருக்கிறார். நீங்கள் இதன்மூலம் இயேசுதரும் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ள அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

Youtube : ASV ROBIN / PORCHELVI ROBIN

கடித தொடர்புக்கு :
இயேசுவின் சமாதானம்
393, பேஸ் 2,
ஹவுசிங் யூனிட், சிட்கோ,
கோயம்புத்தூர் - 641 021,
தென் இந்தியா



for communication :
PEACE OF JESUS
393. Phase 2,
Housing Unit, SIDCO,
Coimbatore - 641 021.
S.India

ஜெப உதவி / தொடர்புக்கு : (+91) 9994510610
Email: asvrobin@gmail.com    www.peaceofjesus.org

Registered with Registrar of News Paper for India
RNI / TNTAM / 14783 / 2002

Postal Regsitration No. CB / 001 / 2015 - 2017
தனிப்பிரதி ரூ. 4/-
ஆண்டு சந்தா - ரூ. 40/-



சி.எஸ்.ஐ. தூத்துக்குடி நாசரேத் திருமண்டலம் நடத்தும்

# நற்செய்தி கூட்டம்



தேவசெய்தி & ஜெபம்

## ஏ.எஸ்.வி. ராபின் - பொற்செல்வி ராபின்



**இடம் : சகல பரிசுத்தவான்களின் ஆலய மைதானம், போலையர்புரம்.**

**மே 13,14,15 வெள்ளி, சனி, ஞாயிறு தினமும் மாலை 6 மணி**

உள்ளத்தை உருக்கும் பரவசப் பாடல்கள், உயிர்ப்பிக்கும் தேவ செய்திகள், விடுதலை தரும் ஜெபம், இயேசு தரும் ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் அழைக்கும் :

சபை ஊழியர் S. ராஜசேகர் Rev. G. டேனியல் ஞானபிரகாசம் MA., B.Ed., MTh.

**இயேசுவின் சமாதானம் சுவிசேஷ ஊழியம்** இயேசுவை அறியாதவர்களுக்கு
**ஏ.எஸ்.வி. ராபின்** பத்திரிக்கை கொடுத்து, பண உதவி செய்த போது




**கர்த்தரின் கிருபையினால் இயேசுவின் சமாதானம் மருத்துவமனை ஊழியம்**
**ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் இயேசுவை பற்றி அறிவித்து, ஜெபித்து, பணஉதவி செய்த போது**







**தேவ கிருபையினால் கடந்த மாதங்களில் ஏ.எஸ்.வி. ராபின், பொற்செல்வி ராபின் தேவ செய்தி கொடுத்த இடங்கள்**




Owned & Published By A.S.V. ROBIN Managing Trustee on behalf of Peace of Jesus Ministry & Trust 393, Phase - 2, Housing Unit, Sidco, Coimbatore - 641 021. and Printed at Vimal Offset Printing, Coimbatore - 641 012. India Editor : A.S.V. ROBIN